(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 115.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, ஓகத்து 23, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0582/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நாட்டில் இயங்கிக்கொண்டிருக்கும் எல்லா புரோட்பான்ட் (அகலப்பட்டை) வழங்குனர்களின் பெயர்களையும்,

(ii) அக்கம்பனிகளின் உடமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் பெயர்களையும்,

(iii) புரோட்பான்ட் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீடிறன்களையும் (அதிர்வெண்களையும்)

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) புரோட்பான்ட் வழங்கும் அலுவலகங்களில் பணிபுரியும் நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) புரோட்பான்ட் வழங்குனர்கள் எப்போது தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தனர் என்பதையும்,

(iii) கடந்த ஐந்து வருடங்களில் புரோட்பான்ட் வழங்குனர்களினால் செலுத்தப்பட்ட வரிகளின் தொகையையும் வருடவாரியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0959/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற கெசினோ விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவை கொண்டு நடாத்தப்படும் இடங்கள் யாவை என்பதையும்,

(iii) அவற்றின் உரிமையாளர்களது பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(iv) அவ்வாறான ஒவ்வொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கெசினோ விடுதிகளின் மூலம் அரசிற்குக் கிடைத்துள்ள வரி வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) கெசினோ விடுதியொன்றை ஆரம்பிப்பதற்கு உரிமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய வழிமுறை யாது என்பதையும்,

(iii) உரிமம் வழங்கும் போது இறுதி அனுமதியளிக்கும் நபர் யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டில் கெசினோ விடுதிகளுக்கான புதிய உரிமப்பத்திரங் களுக்கென விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) இவர்களில் உரிமப்பத்திரம் வழங்கப்படவுள்ளோரின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவ்வாறு உரிமப் பத்திரங்களைப் பெற்றவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1047/ '10

3.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களை ஆசிரிய உதவியாளர்களாக நியமிப்பது தொடர்பாக 2006.10.25 ஆம் திகதி அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றுக்கமையவும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47உப ஆம் இலக்க, 2007/02/10 ஆம் திகதிய அறிவுறுத்தல்களுக்கமையவும், மத்திய மாகாண கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதற்கமைய மத்திய மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) நேர்முகப் பரீட்சையில் மேற்படி பதவிக்கு தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை என்பதையும்;

(iv) இவர்களில் ஏற்கெனவே மேற்படி நியமனங்களைப் பெற்ற ஆட்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்களும் முகவரிகளும் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்குரிய கல்வி வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1080/ '11

4.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் தென் மாகாணத்தில் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த நோயாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்துள்ளதா அல்லது அதிகரித்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தென் மாகாணத்தில் எலிக்காய்ச்சல் நோய் பரவுவதற்கான காரணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அவை யாவை என்பதையும்;

(iii) குறிப்பிட்ட காரணிகளை பிரதேசத்திலிருந்து நீக்குவதற்காக உத்தேசிக்கப்பட்ட அல்லது நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1241/ ’11

5.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ‘தயட்ட கிருல’ கண்காட்சிக்காக கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0991/ ’10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பெருந்தோட்டக் கம்பனிகள் எப்போது தனியார்மயப்படுத்தப்பட்டன என்பதையும்;

(ii) அப்போது பதவியிலிருந்த அரசாங்கம் எது என்பதையும்;

(iii) பெருந்தோட்டக் கம்பனிகள் தனியார்மயப்படுத்தப்பட்ட போது சனாதிபதியாக இருந்தவரின் பெயரையும்;

(iv) தனியார்மயப்படுத்தப்பட்ட பெருந்தோட்டக் கம்பனியின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பெருந்தோட்டக் கம்பனியும் விற்கப்பட்ட விலை என்ன என்பதையும்;

(ii) விற்கப்பட்ட பங்குகளின் நூற்று வீதத்தை கம்பனிவாரியாக யாதென்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) (i) அரசாங்கம் தேசியமயமாக்கல் கொள்கையை பின்பற்றுகின்றமையால், தனியார்மயப்படுத்தப்பட்ட தோட்டத்தொழில் முயற்சிகளை அது மீளப்பெற்றுக்கொள்ளுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், எப்போது அவை மீளப் பெற்றுக்கொள்ளப்படும் என்பதையும்;

(iii) அவ்வாறில்லலையாயின், அவை ஏன் மீளப்பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பதையும்

இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1048/ '10

7\.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய மாத்தளை மாவட்டத்தின் நாஉல, வில்கமுவ, கலேவெல, மாத்தளை ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 31 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்;

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1081/ '11

8\.

கௌரவ புத்திக பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர் எண்ணிக்கையில் 2005 இல் இலிருந்து 2010 வரையான காலப்பகுதிக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையில் பணியாற்றுகின்ற நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வூழியர்களில் 8 - 10 வருடங்களாக நாளாந்தச் சம்பளம் பெற்றுச் சேவைபுரிவோரது எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவ்வூழியர்களின் சேவையை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எப்போது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1092/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தவிசாளரின் முழுப்பெயர் மற்றும் வயது யாதென்பதையும்;

(ii) இவரை அப்பதவிக்கு நியமித்த அதிகாரி யாரென்பதையும்;

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் இவர் கடமையாற்றிய இடம் மற்றும் பதவி யாதென்பதையும்;

(iv) இவரது தொழில்சார் அனுபவங்களும் கல்வித் தமைமைகளும் யாவையென்பதையும்,

(v) இவரது மாதாந்த சம்பளமும் கிடைக்கின்ற ஏனைய கொடுப்பனவுகளும் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1242/ '11

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0992/ '10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரெலிகொம் எப்போது தனியார் மயப்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) விற்பனை செய்யப்பட்ட பங்குகளின் சதவீதத்தையும்;

(iii) அரசாங்கத்தினால் விற்பனை செய்யப்பட்ட பங்குகளின் விலைகளையும்;

(iv) மேற்படி தனியார் மயமாக்கலின் போது, பதவியிலிருந்த அரசாங்கம் மற்றும் சனாதிபதியின் பெயர் ஆகியவற்றையும்;

(v) அப்போதிருந்த தவிசாளரின் பெயரையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அரசாங்கம் தேசியமயமாக்கற் கொள்கையைப் பின்பற்றுவதனால், மேற்கண்டவாறு விற்பனை செய்யப்பட்ட பங்குகளை மீண்டும் கொள்வனவு செய்வார்களா என்பதை அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1049/ '10

12.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை, நுவரெலியா, ஹங்குரன்கெத்த, கொத்மலை மற்றும் ஹட்டன் ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 50 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1082/ '11

13\.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவின் கிண்ணியா ரீ.பீ.ஜாயா மகளிர் வித்தியாலயம் சுனாமியால் அழிவடைந்ததென்பதையும்;

(ii) இப்பாடசாலையைப் புனரமைக்க இற்றைவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் மாணவிகள் தீவிர வசதியீனங்களுக்கு இலக்காகியுள்ளனரென்பதையும்;

(iii) இவ்வாறான நிலைமையின் கீழும் இவ்வித்தியாலயம் க.பொ.த. (சா/த) மற்றும் (உ/த) பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இப்பாடசாலையில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து கல்வியில் நவோதயத்தை ஏற்படுத்துவதற்காக புதிய கட்டிடங்களை நிர்மாணித்து பாடசாலையைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதைக் குறிப்பிடுவாரா?

(இ) (i) கிண்ணியா ரீ.பீ. ஜாயா மகளிர் வித்தியாலயத்தை வேறோர் இடத்திற்கு கொண்டு செல்வதற்கான தயார் நிலை நிலவுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், பாடசாலையைக் கொண்டு செல்லும் புதிய இடம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இப்பாடசாலையை வேறோர் இடத்திற்கு கொண்டு செல்வதனால் அங்குள்ள பெரும்பாலான மாணவியருக்கு போக்குவரத்துச் சிரமங்கள் தோன்றுமென்பதையும்;

(ii) அதன் விளைவாக இவர்களின் கல்வி நடவடிக்கைகள் நலிவடையுமென்பதையும்

அவர் ஏற்றுக் கொள்கிறாரா?

(உ) இன்றேல், ஏன்?

1093/ '11

14\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்துராஜவெல சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டர்மினல்ஸ் லிமிட்டெட் (எரிபொருள் கம்பனி) பெற்றோல் விநியோகத்தை ஆரம்பித்ததை முன்னிட்டு நடாத்தப்பட்ட வைபவத்திற்கு செலவாகிய பணம் எவ்வளவென்பதையும்;

(ii) இப்பணத்தொகையை செலவுசெய்வதற்கு அனுமதி வழங்கிய நபர் யாரென்பதையும்;

(iii) மேற்படி கம்பனி எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்த தினத்தில் எத்தனை லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டதென்பதையும்;

(iv) கொலொன்னாவ தொகுதியிலிருந்து பெற்றோல் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் முத்துராஜவெலயிலிருந்து பெற்றோல் விநியோகம் செய்யப்படுவதை துரிதப்படுத்துவதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கல்வி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகையையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1\.

கௌரவ ஜானக வக்கும்புர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"அசோக செல்லஹேவா புலமைப்பரிசில் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவின் கீழ், நிதி திட்டமிடல் அமைச்சரினால், துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிய 1703/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சரினால், உற்பத்தி வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 மே மாதம் 16 ஆம் திகதிய 1706/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரவின் கீழ் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் நிதி திட்டமிடல் அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011 மார்ச்சு மாதம் 04 ஆந் திகதிய 1695/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 22 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதிய 1701/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.07.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 32 (2) (ஏ) ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2009 நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 1627/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 7.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 8.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

20.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.